முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1354

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.06.2023, புதன்கிழமை

1. வரம் தருகின்ற வள்ளலே
வையகம் காக்கின்ற அண்ணலே
அறம்காத்து இந்த உலகமெல்லாம்
அற்புதத்தை நடத்தவந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 31 ம் நாள், 14.06.2023, புதன்கிழமை)
வரமாக யானே உன்னுள் கலந்துள்ளேன்
வையகத்தை காக்கும் மகா சூட்சுமத்தை
3. சூட்சுமத்தை அரங்கன் உன் தர்மத்திலும்
சூட்சுமத்தை அரங்கன் உன் சன்மார்க்கத்திலும்
மாட்சிமைபட யானே நிறுவியுள்ளேன்
மக்கள் மனமுவந்து ஏற்று இந்த மார்க்கத்தை
4. மார்க்கத்தை தொடர்ந்து பணிந்து வந்தால் போதும்
மக்களுக்கு எல்லாம் தேக்கமின்றி
ஆக்கமுடன் ஆறுமுகன் என் அருளாசி பெறுவதோடு
அனைவருமே இனிபிறவா பெரும்பேற்றுக்கு உறுதியாகி
5. வரமென அரங்கன் உன் ஆளுமையால்
வையகத்தில் ஞான ஆட்சி மலரும்
தருகின்ற தர்மவான்கள் படை பெருகிவர
தரணியில் தர்ம ஞான ஆட்சியாக
6. வருங்காலம் அரங்கன் சேவையால் வளர்ந்து
வல்லமைகொண்ட அரங்கன் தொண்டர்களால் உலகே வியந்து போற்ற
போற்றவே மாற்றம் காணும் புண்ணிய உலகமாகி
ஆற்றல்பட ஞான ஆட்சியும் மலரும்

அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–